# மெட்ரோ ரயில் இன்ஜின் வெள்ளோட்டம்

சென்னை, ஆக. 25–

தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, மெட்ரோ ரயில் இன்ஜின் வெள்ளோட்டம், நேற்று நடந்தது.

சென்னை மெட்ரோ ரயில் முதல் திட்டத்தில், கட்டுமான பணிகள் முடிந்து, விமான நிலையம் மற்றும் பரங்கிமலையில் இருந்து, சென்ட்ரல் வரையும்; விமான நிலையத்தில் இருந்து, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., வரையும், மெட்ரோ ரயில் இயக்கப்படுகிறது.

இத்திட்டத்தில் எஞ்சியுள்ள, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, 9.5 கி.மீ., மெட்ரோ சுரங்கப்பாதை மற்றும் நிலையங்கள் கட்டுமான பணி நடந்து வந்தது.

இப்பாதையில், ஆயிரம் விளக்கு, எல்.ஐ.சி., அரசினர் தோட்டம், சென்ட்ரல், உயர் நீதிமன்றம், மண்ணடி மற்றும் வண்ணாரப்பேட்டை நிலையங்கள் உள்ளன.



தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே நேற்று, மெட்ரோ ரயில் இன்ஜின் வெள்ளோட்டம் நடந்தது.

இப்பாதை மற்றும் நிலையங்கள் கட்டுமான பணிகள் முடிந்து, மின்மயம், சிக்னல், பிளாட்பாரம், டிக்கெட் கவுன்டர் கட்டுமானபணிகள் நடந்து வருகின்றன.

இத்துடன், மெட்ரோ ரயில் முதல் திட்டத்துக்கான, 45 கி.மீ., பாதை பணி முழுவதும், டிசம்பருக்குள் முடியும்.

இதையொட்டி, தேனாம்பேட்டை, டி.எம்.எஸ்., – வண்ணாரப்பேட்டை இடையே, டீசல் இன்ஜின், நேற்று வெள்ளோட்டம் நடத்தப்பட்டது.

விரைவில் இப்பாதையில், ரயில் இயக்கி சோதனை ஓட்டம் நடத்தப்படும். டிசம்பரில், பயணியர் ரயில் போக்குவரத்து துவங்க திட்டமிடப்பட்டுள்ளது.